வினா எண் :: 6.1.3.1.B

இந்திய எண்முறையில் இடமதிப்பை வரையறை செய்து உதாரணங்களுடன் விளக்கவும்.

ஆழ்மனதில் கொள்க

ஒரு எண், ஓர் எண்ணுருவில் வரும் இடத்தைப்பொருத்து அதன் மதிப்பு மாறுபடுகிறது. இதுவே **இடமதிப்பு** என்பதாகும்.

இடமதிப்பை விளக்குவதற்கு ஒரு ஒன்பது இலக்க எண்ணை உதாரணமாக எடுத்துக்கொள்வோம்.

284904753

28,49,04,753 - இந்த எண்ணுருவில் 4 என்ற இலக்கம் இரண்டு இடங்களில் வருகிறது. ஆனால், அவைகளின் மதிப்பு, அவை வரும் இடத்தைப்பொருத்து மாறுபடுகின்றன. முதலில் வரும் 4, நாற்பது இலட்சமாகவும், இரண்டாவது வரும் 4, நான்காயிரமாகவும் மதிப்பைப்பெறுகின்றன.

ஆகையால், ஒரு எண்ணுருவில் ஒவ்வொரு எண்ணிற்குமுடைய இடமதிப்பை தெரிந்துகொள்வது மிகவும் முக்கியமாகிறது.

இந்த எண்ணுருவை உதாரணமாகக்கொண்டு, எண்களின் இடமதிப்பிலிருந்து எவ்வாறு ஒரு எண்ணுருவின் மதிப்பைக்கண்டு பிடிப்பது என்று புரிந்து கொள்ளலாம்.

2	8	4	9	0	4	7	5	3
▽	▽	▽	▽	▽	▽	▽	▽	▽
பத்து கோடி	கோடி	பத்து இலட்சம்	ஒரு இலட்சம்	பத்து ஆயிரம்	ஆயிரம்	நூறு	பத்து	ஒன்று
10,00,00,000	1,00,00,000	10,00,000	1,00,000	10,000	1,000	100	10	1
எண்ணையும் அதன் இடமதிப்பையும் பெருக்கும் பொழுது நமக்கு எண்களின் சரியான உரிய மதிப்பு கிடைக்கிறது.								
⇓	⇓	⇓	⇓	⇓	⇓	⇓	⇓	⇓
20,00,00,000	8,00,00,000	40,00,000	9,00,000	0	4,000	700	50	3

இந்த எல்லா மதிப்புகளையும் கூட்டும் பொழுது, நமக்கு எண்ணுரு கிடைக்கிறது.

20,00,00,000
8,00,00,000
40,00,000
9,00,000
0
4,000
700
50
3
28,49,04,753

இவ்வாறு, ஒரு எண்ணுருவில் இருக்கும் இலக்கத்தைப் பொருத்து அங்கு வரும் எண்ணின் மதிப்பு அமைகிறது.

காண்பவர்களுக்கு, இடமதிப்பு தெளிவாக விளங்கும் விதத்தில், எண்ணுருக்களை இந்திய எண் முறையில் இவ்வாறு **28,49,04,753** காற்புள்ளியிட்டு குறிப்பிடுவது வழக்கம்.

வலமிருந்து இடமாக முதலில் 3 எண்களும் பின்னர் 2 எண்கள் வீதமாகவும் காற்புள்ளியிட்டு எண்ணுருக்களை எழுதுவது இந்திய எண்முறையின் மரபு.

இருபத்து எட்டு கோடியே நாற்பத்து ஒன்பது இலட்சத்து நான்கு ஆயிரத்து எழு நூற்று ஐம்பத்து மூன்று.

Sum & solution prepared on Thursday 6th May, 2021 :: 19:20 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to
V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.